**கவனிக்க.-** *2014.08.08 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1876 - 2014 අගෝස්තු මස 15 වැනි සිකුරාදා - 2014.08.15

*1876 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 700 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 702 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நாயகத்தின் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 701 | | |


**கவனிக்க.-** *உள்ளூர் அதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம், 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2014 இன் இல. 385

எம்ஓடி /டிஈஎவ்/07/01/ஏவீஎப்/ஆர்ஈரீ/378.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர், 2013, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் அபேசிங்க முதியன்சேலாகே தர்மகீர்த்தி, இஇகாப (உ/7346)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, யூன் 27.

8-512

---

2014 இன் இல. 386

எம்ஓடி /டிஈஎவ்/07/01/ஏவீஎப்/ஆர்ஈரீ/377.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர், 2013, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் ஹேவா கீகனகே வீரகொடி, இசிப (உ/7465)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, யூன் 27.

8-511

---

2014 இன் இல. 387

எம்ஓடி /டிஈஎவ்/10/03/பீஆர்ஓ/5ரீ.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவரின் பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக எயார் வைஸ் மார்ஷல் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார் :-

எயார் கொமதோர் மாகலகே லால் கித்சிறி பெரேரா (01357) நிரு/ரெஜி - 2013.03.14

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, சனவரி 16.

8-575

---

2014 இன் இல. 388

எம்ஓடி /டிஈஎவ்/10/03/பீஆர்ஓ/03.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களின் பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து நிரந்தர குரூப் கப்ரின் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-

தற்காலிக குரூப் கப்ரின் தொன் கபில வனிகசூரிய (01503) பொ.க./வி - 2012.01.01
தற்காலிக குரூப் கப்ரின் பிரியங்கர மெஸ்திரிகே சிந்தக பிரியதர்ஷன டயஸ் (01578) நிரு./ரெ - 2012.01.01
தற்காலிக குரூப் கப்ரின் ரணசிங்க ஹெட்டிஆரச்சிலாகே கமல் பிரியந்த ரணசிங்க (01582) தொ/பொ - 2012.01.01
தற்காலிக குரூப் கப்ரின் சமன் சந்திரகுமார பல்லேவெல (01628) வான்/இயக்கு - 2012.01.01
தற்காலிக குரூப் கப்ரின் ரொஷான் சேனக வியன்வில (01644) நிருவாகம் - 2012.01.01
தற்காலிக குரூப் கப்ரின் ராஜ் நிஷாந்த திலகசிங்க (01687) உபகரணங்கள் - 2012.01.01

தற்காலிக குரூப் கப்ரின் ரத்நாயக்க முதியன்சேலாகே மனுஜ மிஷாந்த பண்டார வெரெல்லகம (01550) நிருவாகம் - 2012.01.02

தற்காலிக குரூப் கப்ரின் மெதிந்திர தில்ஷான் ஜயந்தி வாசகே (01576) நிரு./பெர - 2012.01.02

தற்காலிக குரூப் கப்ரின் ஹெதிகல்லகே சம்பத் சுஜீவ துய்யாகொன்தே (01642) பொ.க./வி - 2012.01.02

தற்காலிக குரூப் கப்ரின் பிரசன்ன ரணசிங்க (01646) தொ/பொ - 2012.01.02

தற்காலிக குரூப் கப்ரின் வர்ணகுலசூரிய வீரகுட்டிகே பீட்டர்சன் துமலோ பிரணாந்து (01577) நிரு./ரெ - 2012.01.03

தற்காலிக குரூப் கப்ரின் ஜனக ஆதர்ஷ் நானயக்கார (01626) நிருவாகம் - 2012.01.03

தற்காலிக குரூப் கப்ரின் தம்மிட்ட ஆரச்சிகே தொன் ரஞ்சித் சேனாநாயக்க (01648) தொ/பொ - 2012.01.03

தற்காலிக குரூப் கப்ரின் ராஜபக்ஷ அப்புஹாமிலாகே உதேனி பிரியதர்ஷன ராஜபக்ஷ (01695) பொ.க./வி - 2012.01.03

தற்காலிக குரூப் கப்ரின் ரவிந்திர பண்டுக்காபய லியனகமகே (01641) பொ.க./வி - 2012.01.04

தற்காலிக குரூப் கப்ரின் சுஜீவன் கீர்த்தி அபேகுணசேகர சேனாரத்ன (01650) தொ/பொ - 2012.01.04

தற்காலிக குரூப் கப்ரின் கயிரன கமகே வருண திலக் குமார கலுஆரச்சி (01655) நிரு./ரெ - 2012.01.04

தற்காலிக குரூப் கப்ரின் உபுல சேனக லியனசூரிய (01705) தொ/பொ - 2012.01.05

தற்காலிக குரூப் கப்ரின் கலுஆரச்சி கங்கானமலாகே அதுல குமார கலுஆரச்சி (01659) நிரு./ரெ - 2012.01.05

தற்காலிக குரூப் கப்ரின் முதியன்சேலாகே பாலித செனவிரத்ன (01610) நிரு./ரெ - 2012.01.06

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டபப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, பெப்புருவரி 22.

8-576

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

கலேவெல புராதன பம்பாவ ரஜ மஹாவிகாரையின் வருடாந்த எசல மஹா பெரஹர

மாத்தளை மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள புராதன பம்பாவ ராஜ மஹா விகாரையின் பெரஹர 2014, ஓகத்து மாதம் 29, 30 ஆந் திகதிகளில் நடைபெறவிருப்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் விதிமுறைகளின் பகுதி II இன் பிரகாரம் மேற்கண்டவாறு அறியத் தருகிறோம்.

ஏ. எம். கே. சி. கே. அதபத்து,
பிரதேச செயலாளர்,
கலேவெல.

பிரதேச செயலகம்,
கலேவெல,
2014, யூலை 21.

8-538

---

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய திருவிழா - 2014

இவ்வாலய திருவிழாவிற்கு சமுகம் அளிக்கும் யாத்திரிகர்களுக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்,

மேற்படி ஆலயத் திருவிழா 2014 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25 ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2014 ஆம் ஆண்டு புரட்டாதி மாம் 09 ஆந் திகதி முடிவடையும் ஆதலால், அதில் பங்குபற்றும் யாத்திரிகர்களுக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் 1984 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 9886 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள விதிகள் ஆலயத் திருவிழா முடிவடையும் வரை அமுலில் இருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

யூ. உதய ஸ்ரீதர்,
பிரதேச செயலாளர்,
ஏறாவூர்பற்று.

பிரதேச செயலகம்,
ஏறாவூர்ப்பற்று,
செங்கலடி.

8-574

---

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்து போயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணியினை பதிவு செய்த புத்தகங்களில் மீள தயாரிக்கப்பட்டுள்ளதை காணிப் பதிவேடு மீட்டெழுதிய இருமடித்தாள் (120 ஆம் அத்தியாயமான) கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.

2. 2014.08.15 ஆந் திகதி தொடக்கம் 2014.08.29 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை அநுராதபுரக் காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எதுவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடன் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 2014.09.05 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பமிடப் பட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| அநுராதபுர மாவட்டத்தின் அநுராதபுரக் காணிப்பதிவகத்தில் மநுபி 1/521 உடைய ஏடு | வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் விலச்சிய கோறளையின் மேற்கு நுவரகம் பிரதேச பிரதேச வருமான அதிகாரி பிரிவின் விலச்சிய தெற்கு இவுர இல் அமைந்துள்ள ''பேமடுவ கெலே'' என்னும் இடத்திற்கு அளவீட்டுத் தலைமை யதிபதி மூலம் அளவிடப்பட்ட இலக்கம் F.C.P.A. 02 உடைய அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் 215 உடைய இடத்திற்கான எல்லைகள் :-<br><br>வடக்கு : காணித்துண்டு இலக்கம் 213 (அடி பாதை) மற்றும் 216 ;<br>கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 216 ;<br>தெற்கு : காணித்துண்டு இலக்கம் 259 மற்றும் 214;<br>மேற்கு : காணித்துண்டு இலக்கம் 214.<br><br>விஸ்தீரணம் : 02ஏ. 0றூ. 25பே. | 1. சனாதிபதி செயலாளரின் மூலம் எழுதி 1982.03.10 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இலக்கம் அநு/பி 521 உடைய அளிப்புப் பத்திரம்.<br><br>2. இலக்கம் அநு/பி/521 உடைய அளிப்பிற் குரிய 1994.03.19 ஆந் திகதி வழங்கப்பட்ட பின்னுரித்தாளரினை பெயர் குறிக்கும் ஆவணம். |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/08/2013/ஏடு. தயாரித்தல்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

8-564

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ வின் பணிப்பாளர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த அறிவித்தல்

நம்பே விதானலாகே டினுஷா சம்பத் சந்திரசேகர, இல. 338/A, கலவிற்றியாகொட வத்த, பொன்சேகா வீதி, ஹல்தோட்ட

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் 2014, யூன் 27 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''பிணைப்படுத்துபவர்/ அடமானதாரராகிய நம்பே விதானலாகே டினுஷா சம்பத் ரேகா சந்திரசேகர கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரொமானி தலவத்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013, ஆவணி 16 ஆந் திகதிய 352 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறியின் மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ்

ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் நம்பே விதானலாகே டினுஷா சம்பத் சந்திரசேகரவினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள்கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும், குறிப்பிட்ட கடன் பெறுபவர் குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையாலும்,

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் 2013.03.24 ஆந் திகதி அன்றுள்ள மிகைப்பற்று வசதிக் கணக்கின் மீதுள்ள மூலதன நிலுவைத் தொகையான பத்து இலட்சத்து இருபத்தொன்ப தாயிரத்து எண்ணூற்று நாற்பத்து நான்கு ரூபா பதினொரு சதம் (ரூ 10,29,844.11) தொகையையும், 2014.03.25 ஆந் திகதியிலிருந்து குறித்த தொகைக்கான கூடுதலான வட்டியையும் (மாதாந்த இடைவெளியிலான கூட்டு அடிப்படையில்) மற்றும் 2014.03.24 ஆந் திகதியன்றுள்ள தவணைக் கடன் மீதுள்ள நிலுவைத் தொகை யான எழுபத்திரண்டு இலட்சத்து எண்ணூற்று எழுபத்திரண்டு ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 72,00,872.67) தொகையையும், 2014.03.25 ஆந் திகதியிலிருந்து அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டு ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூ. 68,00,058.91) தொகை மீதுள்ள கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு நியதிச் சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன் பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள் உரிமைகளை கொழும்பு திரிவங்க மற்றும் சேனாநாயக்க ஏலதாரர்கள் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. திரிவாங்க, சீ. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோறளை, முன்வத்தேபாகே பற்று பண்டாரகம பிரதேச சபையின் எல்லைக்குள்ளான பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவு எல்லைக்குள் அமைந்த ஹல்தோட்ட மேற்கு, கிராம உத்தியோகத்தர் பிரிவு 647 ஹல்தோட்டயில் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள், மற்றும் அதில் நிற்கும் எல்லாம் சேர்த்து கோனுபலாய குருந்துவத்த என அழைக்கப்படும் காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜி மல்வென்ன தயாரித்த 2011 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆந் திகதிய 4848 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A3 என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் குறித்த லொட் A3 ஆனது - வடக்கு : இங்குள்ள லொட் 1 ; கிழக்கு : பொன்சேகா வீதி ; தெற்கு : லொட் B லொட் A2 மற்றும் ; மேற்கு : லொட் A2 எல்லைகளையும் குறித்த 4848 ஆம் வரைபடத்தின்படி ஒன்று தசம் நான்கு எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.48பே.) விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் ஹொரணை காணிப் பதிவகத்தில் D 280/142 தொகுதிப் பக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

8-580

---

### மக்கள் வங்கி – புறக்கோட்டை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் அறிவித்தல்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2013, திசெம்பர் 24 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென தாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"ஹேவா சஹபந்துகே சுனந்த கல்யாணி என்பவர், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி எம். என். பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010.11.15 ஆந் திகதிய 4213 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலால், சொல்லப்பட்ட 4213 ஆம் இலக்க முறி மீது முப்பத்துமூன்று இலட்சத்து முப்பத்தாறாயிரத்து தொளாயிரத்து முப்பத்து நான்கு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 33,36,934.92) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளதாதலாலும், மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அவர் களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் சொல்லப்பட்ட 4213 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் முப்பத்துமூன்று இலட்சத்து முப்பத்தாறாயிரத்து தொளாயிரத்து முப்பத்து நான்கு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 33,36,934.92) கொண்ட தொகையையும் 2013.02.12 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 16% வட்டியையும், செலவு தொகைகளையும் வேறு விற்பனை இறுப்பனவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஏர்வின் பெரேரா அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மாகிக்கின்றது.".

### ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுரவின் மாநகர சபை எல்லைகளினுள் கங்கொடவிலவில் பங்கிரிவத்த வீதி நெடுகிலும் அமைந்துள்ளதும், "வெவபள்ளே ஓவிட்ட மறுபெயர் பத்திரகே ஓவிட்ட" எனவழைக்கப்பட்டு அறியப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. பீ. கன்னங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.11.28 ஆந் திகதிய 2007/57 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், "காணித்துண்டம் 01" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட "காணித்துண்டம் 01" பின்வரும் எல்லை களையுடையது - வடக்கு : பங்கிரிவத்த வீதி ; கிழக்கு : அதே காணியின் ஏனைய பாகம் ; தெற்கு : தீப எல மற்றும் ; மேற்கு : திஸ்ஸ வனகுரு மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணி ஆகிய எல்லைகளையுடைய அதன்மீதுள்ள கட்டிடங்கள், பயிர்கள், சொல்லப்பட்ட ஆதனத்துடன் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட பொருத்திகள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து முப்பத்தொரு

பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 31பே.) அல்லது 0.0784 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் தெல்கந்தக் காணிப் பதிவகத்தில் M 3164/230 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

பிரதேச முகாமையாளர்,
(கொழும்பு வடக்கு).

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
மேற்கு வலயம் -01,
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

8-568

---

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ வின் பணிப்பாளர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த அறிவித்தல்*

சமந்த லலித் விமலசேகர, இல. 105/2, கிழக்கு எத்துமல்பிற்றிய, பொலன்னறுவை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகள் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் 2014, யூன் 27 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப் படுகின்றது:-

“பிணைப்படுத்துபவர்/அடமானதாரராகிய சமந்த லலித் விமலசேகர பிரசித்த நொத்தாரிசு ஆரியசேன கால்லகேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஐப்பசி 16 ஆந் திகதிய 2120 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறியின் மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் சமந்த லலித் விமலசேகரவினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள்கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும், குறிப்பிட்ட கடன் பெறுபவர் குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையாலும்,

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் 2013.01.08 ஆந் திகதியன்றுள்ள மிகைப்பற்று வசதிக் கணக்கின் மீதுள்ள மூலதன நிலுவைத் தொகையான முப்பத்தொரு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து நாற்பத்தொரு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ 31,41,041.38) தொகையையும், 2014.01.09 ஆந் திகதியிலிருந்து இணங்கப்பட்டபடி குறித்த தொகையான கூடுதலான வட்டியையும் (மாதாந்த இடைவெளியிலான கூட்டு அடிப்படையில்) மற்றும் 2014.01.08 ஆந் திகதியன்றுள்ள தவணைக் கடன் மீதுள்ள நிலுவைத் தொகையான முப்பத்தைந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நாநூற்று எண்பத்தேழு ரூபா எண்பத்துமூன்று சதம் (ரூ. 35,62,487.83) தொகையையும், 2014.01.09 ஆந் திகதியிலிருந்து இணங்கப்பட்டபடி முப்பத்தொரு இலட்சத்து எழுபத்தையாயிரத்து எழுபத்துமூன்று ரூபா ஒரு சதம் (ரூ. 31,75,073.01) தொகை மீதுள்ள கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு நியதிச் சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன் பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள் உரிமைகளை கொழும்பு திரிவங்க மற்றும் சேனாநாயக்க ஏலதாரர்கள் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. திரிவாங்க, சீ. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.”

### அட்டவணை

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தாமன்கடுவ பிரதேச செயலகப் பகுதியில் அமைந்த நியு டவுண் பொலன்னறுவை கிராமத்தில் அமைந்த பற்றிய தமண முக்கலன என அழைக்கப்படும் காணிக்கு நிலஅளவையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டு அவரது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள எப். சீ. பி. பொ. 160 உள்ளீடு 11 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் இல. 1023 ஆனது வடக்கு : லொட் இல. 1022; கிழக்கு : லொட் இல. 1025 ; தெற்கு : லொட் இல. 1024 ; மேற்கு : லொட் இல. 535 எல்லைகளையும் கொண்டு சைபர் தசம் சைபர் ஒன்பது எட்டு சைபர் (0.0980 ஹெக்டேயர்) ஹெக்டேயர் விஸ்தீரணத்தை கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் நிற்கும் எல்லாவற்றுடனும் சேர்த்து கொண்டுள்ளது.

குறித்த காணியானது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பிரேமரத்ன தயாரித்த 2011.12.22 ஆந் திகதிய சமீபத்திய 11/164 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தாமன்கடுவ பிரதேச செயலகப் பகுதியில் அமைந்த நியு டவுண் பொலன்னறுவை கிராமம், மத பத்துவைவில் அமைந்த பற்றியதமன (நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட எப். சீ. பி. பொ. 160 வரைபடத்தில்உள்ள லொட் இல. 1023 இன் மீள் அளவீடு) என அழைக்கப்படும் காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பிரேமரத்ன தயாரித்த 2011.12.22 ஆந் திகதிய 11/164 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியானது வடக்கு : எப். சீ. பி. பொ 160 இலுள்ள லொட் இல. 1022 ; கிழக்கு : எப். சீ. பி. பொ 160 இலுள்ள லொட் இல. 1025 ; தெற்கு : எப். சீ. பி. பொ 160 இலுள்ள லொட் இல. 1024 ; மேற்கு : எப். சீ. பி. பொ 160 இலுள்ள லொட் இல. 535 எல்லைகளையும் கொண்டு முப்பத்தொன்பது தசம் ஐந்து நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 39.54பே.) அல்லது சைபர் தசம் ஒன்று சைபர் சைபர் (0.100 ஹெக்டேயார்) ஹெக்டேயர் விஸ்தீரணத்தை கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் நிற்கும் எல்லாவற்றுடனும் சேர்த்து கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

8-581

## மக்கள் வங்கி

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழான தீர்மானம்*

2014, மாச்சு 28 ஆந் திகதி நடைபெற்ற மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்தில் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் காணும் தீர்மான்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

"மக்கள் வங்கியின் பெயரில் கல்முனை பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். எம். ஜமீல் அவர்களினால் எழுதி தயாரிக்கப்பட்ட 2012.06.15 ஆந் திகதியிடப்பட்ட 5927 ஆம் இலக்க ஈட்டு முறியின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய நிலுவை அப்துல் மஜீட் அன்வர் அவர்களினால் செலுத்தப்படாமையினால் இலக்கம் 5927 ஆம் ஈட்டுமுறியின் மூலம் தற்போது ஒரு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா எழுபது சதம் (ரூ. 1,29,16,666.70) மக்கள் வங்கிக்கு செலுத்தவேண்டியுள்ளது. மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட மற்றும் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு கீழ், ஒரு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா எழுபது சதத்தினை (ரூ. 1,29,16,666.70) 2012.11.15 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரையும் வருடத்துக்கு நூற்றுக்கு இருபத்து ஒன்று 21% வீதம் ஒரு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா எழுபது சதம் (ரூ. 1,29,16,666.70) நிலுவைத் தொகைகக்கு உட்பட்ட மேலதிக வட்டியும், விற்பனை செலவு மற்றும் மக்கள் வங்கிச் சட்டம் 29எல் (29L) பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய தொகை அதற்குப் பிறகு கிடைக்கப்பெற்ற ஏதேனும் கொடுப்பனவுகளை குறைத்து அறவிடுவதற்கு 5927 ஆம் இலக்க முறியின் மூலம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டடங்கள் கொழும்பு 12, பெல்மன் வீதி, இலக்கம் 25பி என்னும் இடத்தை சேர்ந்த அதிகாரமளிக்கப்பட்ட ஏலவிற்பனையாளர் எரந்தி சமன்மலி ராமநாயக்க அவர்களால் பீரசித்த ஏலவிற்பனையில் விற்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளன.

### ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் விவரணம்

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் கல்முனை நகர சபை எல்லைக்குள் கரைவாகுபத்து சாய்ந்தமருது கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரமளிக்கப்பட்ட நிலஅளவையாளர் எச். எல். ஏ. எம். ஹிஸாம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2009.04.22 ஆந் திகதியிடப்பட்ட 819 ஆம் இலக்க நில அளவையாளரின் நில அளவைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ''கடைவளவு'' என அழைக்கப்படும் குறிப்பிட்டுள்ள காணித்துண்டுக்கு எல்லை - வடக்கு : பாத்தமுத்து மற்றும் கணவரினால் உரிமை கோரும் தோட்டமும் ; கிழக்கு மற்றும் தெற்கு : எம். சித்தி சவாஹிராவின் உரிமை கோரும் தோட்டமும்; மேற்கு: கல்முனை அக்கரைப்பத்து பிரதானப் பாதையும் மற்றும் எல்லைக்குள் அமைந்துள்ள நான்கு தசம் ஏழு எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 4.78பே.) விசாலமான முழுமையான காணித்துண்டு அதற்குள் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் பயிர், மரம், செடி, கொடி அனைத்துமாகும். இது கல்முனை காணிப் பதிவகத்தில் இலக்கம் K229/85 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். நேசராஜா அவர்களால் தயாரிக்கப்பட்ட 2012.01.10 ஆந் திகதியிடப்பட்ட SNR/2012/688 ஆம் இலக்க மிக அண்மைய நில அளவைப் படத்துக்கு அமைவாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விபரிக்கப்பட்டுள்ளன.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் சாய்ந்தமருது - II பிரதான பாதையில் அமைந்துள்ள கல்முனை நகர சபை எல்லைக்குள் ''கடைவளவு'' எனும் காணித்துண்டுகள் இரண்டுக்கும் எல்லை - வடக்கு : பாதும்மா மற்றும் கணவரினால் உரிமை கோரும் இடம் ; கிழக்கு : எம். எம். சித்தி சவாஹிராவினால் உரிமை கோரும் இடமும் ; தெற்கு : எம். எம். சித்தி சவாஹிராவின் உரிமை கோரும் இடமும் மற்றும் ; மேற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரச் சபை) ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ள மூன்று தசம் ஒன்பது ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.96பே.) விசாலமான முழுமை யான காணித்துண்டு அதற்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர், மரம், செடி, கொடி அனைத்துமாகும்.

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

பிரதேச முகாமையாளர்,
அம்பாறை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
அம்பாறை.

8-569

---

## இ. அ. நி. கூ. வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2014, மே 28 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 12553 ஆம் பதிவிலக்கத்தைக் கொணடதும், நுகேகொடையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான நில்வல ஒவ்செட் பிரின்டேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். கே. லியனகே என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, ஒற்றோபர் 21, 25 ஆந் திகதிய

244 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் 2013, பெப்புருவரி 14, 15 ஆந் திகதிய 473 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

2014, மாச்சு 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக நான்கு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபா ஏழு சதம் (ரூ. 4,52,68,350.07) கொண்ட தொகையும், 2014, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை நான்கு கோடியே முப்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று ஒரு ரூபா (ரூ. 4,30,64,601.00) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும், ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7.0%) விளிம்பும் அதாவது ;

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்;

சொல்லப்பட்ட நில்வல ஓவ்செட் பிரின்டேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 244, 473 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணிகளையும், வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து நான்கு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபா ஏழு சதம் (ரூ. 4,52,68,350.07) கொண்ட தொகையையும், 2014, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை நான்கு கோடியே முப்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று ஒரு ரூபா (ரூ. 4,30,64,601.00) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும், ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7.0%) விளிம்பும் அதாவது ;

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்;

அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம், நில்வல ஓவ்செட் பிரின்டேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டுக்காகவும் அதன்சார்பிலும் பணிப்பாளராகவுள்ள அருண உபுல் ஜயசிங்க என்பவரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**234 ஆம், 473 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

பாகம் I

473 ஆம் இலக்க ஈட்டுமுறியில் 'முதலாம் அட்டவணையில்' விவரிக்கப்பட்டதும், 244 ஆம் இலக்க ஈட்டுமுறியில் 'அட்டவணையின் பந்திகள் 1, 2, 3, 4, 6 மற்றும் 7 இலும் விபரிக்கப்பட்டதுமான ஆதனம்

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் ஸ்ரீ ஜயவர்தனபுர - கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் கங்கொடவில் கிழக்கின் கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை எல்லைகளினுள் உடஹமுல்லக் கிராமத்தில் அமைந்துள்ளதும், கொட்டாவ வீதியில் 390/4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைத் தற்போது கொண்டதும், பழைய கொட்டாவ வீதியில் 390Q ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைத் கொண்டதும், மில்லகஹாவத்த மறுபெயர் கெபெல்லகஹாவத்த மறுபெயர் தெல்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர், கே. எம். ஏ. எச். பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999, திசெம்பர் 12 ஆந் திகதிய 520 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 21 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக் கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 21 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டம் 18 (20 அடி அகல வீதி ஒதுக்கிடம்) ; கிழக்கு : காணித்துண்டம் 22 ; தெற்கு : 868A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 மற்றும் ; மேற்கு : காணித்துண்டம் 20; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 520 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது பேர்ச்சுகளை (0ஏ. 0றூ. 9.0பே.) கொண்டுள்ளதுடன், தெல்கந்த நுகேகொடைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் ஸ்ரீ ஜயவர்தனபுர - கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் கங்கொடவில் கிழக்கின் கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை எல்லைகளினுள் உடஹமுல்லக் கிராமத்தில் அமைந்துள்ளதும், கொட்டாவ வீதியில் 390/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைத் தற்போது கொண்டதும், பழைய கொட்டாவ வீதியில் 390R ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைத் கொண்டதும், மில்லகஹாவத்த மறுபெயர் கெபெல்லகஹாவத்த மறுபெயர் தெல்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர், கே. எம். ஏ. எச். பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999, திசெம்பர் 12 ஆந் திகதிய 520 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 22 என அடையாளமிப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 22 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டம் 18 (20 அடி அகல வீதி ஒதுக்கிடம்) ; கிழக்கு : காணித்துண்டம் 23 ; தெற்கு : 868A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 மற்றும் ; மேற்கு : காணித்துண்டம் 21 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 520 ஆம் இலக்க வரைபடத்தின்படி எட்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 8.0பே.) கொண்டுள்ளதுடன், தெல்கந்த நுகேகொடைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

3. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் ஸ்ரீ ஜயவர்தனபுர - கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் கங்கொடவில் கிழக்கின் கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை எல்லைகளினுள் உடஹமுல்லக் கிராமத்தில் அமைந்துள்ளதும், கொட்டாவ வீதியில் 390/2 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைத் தற்போது கொண்டதும், பழைய கொட்டாவ வீதியில் 390S ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைத் கொண்டதும், மில்லகஹாவத்த மறுபெயர் கெபெல்லகஹாவத்த மறுபெயர் தெல்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர், கே. எம். ஏ. எச். பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999, திசெம்பர் 12 ஆந் திகதிய 520 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 23 என அடையாளமிப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 23 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டம் 18 (20 அடி அகல வீதி ஒதுக்கிடம்) ; கிழக்கு : காணித்துண்டம் 24 ; தெற்கு : 868A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 மற்றும் ; மேற்கு: காணித்துண்டம் 22 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 520 ஆம் இலக்க வரைபடத்தின்படி எட்டு பேர்ச்சுகளை (0ஏ. 0றூ. 8.0பே.) கொண்டுள்ளதுடன், தெல்கந்த நுகேகொடைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

